# யாழ்ப்பாணத்தில் எழுந்த தமிழ்மருத்துவ நூல்கள்

ஸ்ரீதரன்.க

மருத்துவம் எனும் தொழிலைச் செய்வதற்கு மருத்துவ அறிவு மிக முக்கியமானதாகும். இதற்கு ஆதாரமாக இருப்பது மருத்துவ நூல்களாகும். யாழ்ப்பாணத்தில் தமிழ் மருத்துவம் என்று கூறும்போது சித்தமருத்துவத்தையே குறிக்கிறது. இம்மருத்துவம் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடைபெற்ற காலமெனப் பரராசசேகரம் காலத்தை அளவிடலாம். இக்காலத்தில் 12000 பாடல்கள் உடைய பரராசசேகரம் எனும் சுவடி வைத்தியநூல் எழுந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். இவ்வாய்வில் அச்சு வடிவில் எழுந்த மருத்துநூல்கள் அவற்றின் நோக்கங்கள் இந்நூல்களினால் மருத்துவத்தின் நிலமை எப்படி இருந்தது? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.

சித்தர்கள் காலத்திலே அச்சு இயந்திரங்கள் இல்லாத நிலையில் ஏட்டுச்சுவடிகளே காணப்பட்டன. இக்காலப்பகுதியில் மன்னனஞ் செய்து நினைவில் நிறுத்துவதற்கு

எளிமையான முறையில் பாடல்வடிவிலே நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. கி.பி. 12 -15ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தமிழ் மன்னர் காலப்பகுதியில் பரராச்சேகரம் செகராச்சேகரம் இலங்கைச்சிங்க மன்னன் நயனவிதி போன்ற நூல்கள் தோற்றம் பெற்றன.

யாழ்ப்பாணத்தரசர்களால் எழுதிப்பாதுகாத்த தமிழ் வைத்தியச்சுவடிகள் சித்த மருத்துவ வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. மன்னர்களின் வீழ்ச்சியுடன் வைத்தியஏடுகள் தனிப்பட்ட வைத்தியர்களிடம் அவர்களின் சொத்தாக கைமாறின. இவை சில வைத்தியர்களைச் சிறந்த வைத்தியர்களாகவும் வைத்திய பரம்பரைகளாகவும் மாற்றியமைத்தன. 1929-1934 வரையில் ஐ. பொன்னையா அவர்களால் பல ஏடுகள் பாதுகாக்கப்பட்டு நூலுருப்பெற்றன. இவைமட்டுமன்றி வேறு பல வைத்தியர்களாலும் இயற்றப்பட்ட நூல்கள் வைத்தியத்தில் நோய்நிதானம். சிகிச்சை மூலதத்துவம் மூலிகைகள் தாதுசீவவகுப்பு வைத்தியிலக்கணம் விஷவைத்தியம் கண்வைத்தியம் எனப் பல்வேறு நூல்கள் எழுந்து தமிழ் மருத்துவத்தை வளர்த்தெடுத்தன. 1840 இல் வைத்தியர் சாமுவேல் கிறீன் அவர்கள் பல ஆங்கில நூல்களை மொழி பெயர்ப்புச் செய்ததால் சித்த வைத்தியம் மேலைத்தேய வைத்திய அறிவைப் பெறுவதற்கு வழிவகுத்தது. பின்னர் 1990 இன் பிற்பகுதியில் இலக்கிய சம்பந்த அறிவை வளர்ப்பதிலும் சித்த மருத்துவ நூல்களின் உருவாக்கலின் அவசியத்திற்கும் நூல் உருவாகத் தொடங்கின. 2000ஆம் ஆண்டுக்குப் பின்காலப்பகுதியில் பாடவிதானங்கள் சம்பந்தமாகவும் மருத்துவ ஆராய்ச்சி சம்பந்தமாகவும் நோய்வராது பாதுகாப்பு தொடர்பாகவும் மருத்துவமனை நிர்வாகம் போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குப் பல நூல்கள் உருவாகியிருப்பது தமிழ்மருத்துவநூல்களின் பரிணாம வளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டுகிறது. இந்நூல்களைப் பாதுகாப்பது காலத்தின் தேவையாகும்.